ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000 அளித்தல்.

@ * 69 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-78 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட ஓய்வு பெறும் அரசு ஊழியர்கட்கு ரூ. 10,000 அளிக்கும் திட்டம், எந்த நிலையில் உள்ளது ?

(இ) அத்திட்டம் எப்போது செயல் வடிவம் பெறும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்தத் திட்டம் அரசு அலுவலர் சங்கங்களால் ஏற்கப்படாததால் கைவிடப்பட்டது.

(இ) அரசு அலுவலர் சங்கங்களுடன் கலந்து ஆலோசித்து மாற்றுத் திட்டம் ஒன்று உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டுமென்று எல்லாச் சங்கங்களும் கோரிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளன. 7—1—1978 அன்று அடித்தள அரசு ஊழியர், ஆசிரியர் மற்றும் உள்ளாட்சி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு 50 ஆயிரம் பேர் கொண்ட ஒரு பேரணியை நடத்தி முதலமைச்சர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது, ஒரு வாரத்திற்குள் இதுசம்பந்தமாக, சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி மொழியளித்தார்கள். அந்த உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அதன்படி விரைவில் அனைத்துச் சங்கங்களைச் சார்ந்தவர்களை அழைத்துப் பேசி துரிதமாக முடிவு எடுக்கப்படுமா? முதலமைச்சரின் உறுதிமொழி நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சங்கங்களே இது சம்பந்தமாக முயற்சி செய்து தலைமைச் செயலாளரையும், நிதிச் செயலாளரையும் அணுகலாம். அல்லது சங்கங்களாகவே அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். இதுவரை அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. சங்கங்களே தலைமைச் செயலாளரையும், நிதிச் செயலாளரையும் இது சம்பந்தமாக அணுகினால், அதை ஒரு படியாக எடுக்கலாம். அல்லது இவர்கள் மூலமாக விரைவில் முடிவு எடுப்பதற்கு முயலலாம்.

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : போராட்டக் காலத்திலே போராடியவர்களை அழைத்துப் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இது சம்பந்தமாக உறுதிமொழி தந்தார்கள். நான்கூட இதுபற்றி இந்த அவையில் பேசியிருக்கிறேன். அன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இருந்தார்கள். ஆகவே, இந்நிலையில் அரசே பேச்சுவார்த்தைக்கு உரியவர்களை உடனே அழைத்துப் பேசி உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி கலந்து பேசி தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

Motor Car Allowance.

* 70 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) the rate of Motor Car Allowance that is paid to Government Servants, who go on official tours in their own motor cars;

(*b*) the date on which this rate was fixed;

(*c*) whether, in view of the increased cost of petrol, tyres, battery, etc., there is any proposal to raise he same; and

(*d*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மோட்டார் காருக்கென்றளிக்கப்படுகிற தற்போதைய பயணத் தொலைவுப்படி விதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

முதல் 100 கிலோ மீட்டருக்கு—கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு.

அடுத்த 100 கிலோ மீட்டருக்கு—கிலோ மீட்டருக்கு 96 காசு.

எஞ்சிய தொலைவுக்கு—கிலோ மீட்டருக்கு 85 காசு.

மாற்றல் காரணமாக பயணங்களுக்கு, தமிழ்நாடு பயணப்படி விதிகளைச் சேர்ந்த 72 (1) ( ) (2) விதியின்கீழ் அனுமதிக்கத்தக்க பயணத் தொலைவுப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. நிலை I —கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு.
2. நிலை II —கிலோ மீட்டருக்கு 70 காசு.
3. நிலை III
4. நிலை IV—கிலோ மீட்டருக்கு 55 காசு.

(இ) 14—10—1980.

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.